# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 14 - 2025*

**30.03.2025 அன்னையால் நடத்தப்பட்ட தகவற்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்னை தலைமை நிருவாகத்தினரால் பெற்றோர் தகவற்கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற பலவழிகளிலும் பணிகளைச் செய்து கூட்டத்தை நடத்தித்தந்த வகுப்புப் பிரதிநிதிகள் அனைவருக்கும், கூட்டம் மிக அமைதியான முறையில் நடைபெற ஒத்துழைப்பினை வழங்கிய அனைத்து பெற்றோர் அங்கத்தவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னை தலைமை இணைப்பாளரால் நிருவாகக் கட்டமைப்புப் பற்றியும், பாடசாலையின் இன்றைய சூழ்நிலை பற்றியும் அதற்கான விளக்கமும் தெளிவாகப் பெற்றோருக்கு எடுத்துக் கூறப்பட்டது. பெற்றோர்களும் ஆரோக்கியமான பல கேள்விகளைக் கேட்டு தங்கள் ஐயப்பாடுகளில் தெளிவடைந்தனர். அன்னை தலைமை நிர்வாகம் ஏற்கனவே அறிவித்தது போல், கற்றலுக்கு அனைத்து மாணவர்களும் பங்கேற்கலாம் என்ற தகவல் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

கண்காணிப்புக் கருவி பற்றி பெற்றோர் கேட்ட கேள்விக்கு இது பற்றி அன்னை தலைமை நிருவாகத்தினர் கலந்துரையாடிய பின்னர் மேற்கொண்டு எவ்வாறு இதனைக் கையாள்வது என்பது பற்றி எமக்குத் தகவல் தருவதாகக் கூறப்பட்டது.

**குறிப்பு: பாலூட்டும் தாய்மார்கள் தேவை ஏற்படும் போது நிருவாகத்திடம் கேட்டால் வழமை போல் அதற்கான ஒழுங்குகள் நிருவாகத்தினரால் செய்து தரப்படும்.**

### கல்வி - ஆண்டிறுதித் தேர்வுகள் விவரம்:

***புலன்மொழித்தேர்வுகள்***

10.05.2025 மற்றும் 11.05.2025 அனைத்துலக த.மே.பே. புலன்மொழித்தேர்வு.
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் ஆண்டிறுதிப் புலன்மொழித்தேர்வு நாள் விவரங்கள் விரைவில் வழங்கப்படும். இத்தேர்வு 20.05.2025 இற்கு முன் இடம்பெறும்.

***எழுத்துத் தேர்வுகள்***

23.05.2025 மற்றும் 24.05.2025 - அன்னை பூபதி தமிழ்க் கலைகூடத்தின் ஆண்டிறுதிப் பொதுத்தேர்வு.
07.06.2025 - அனைத்துலக த.மே.பே. ஆண்டிறுதித் தேர்வு.

### கலை - 04.04.2025 வெள்ளி, 05.04.25 சனி, 06.04.2025 ஞாயிறு

கலை வகுப்புகள் வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

### கலைப்பாடத் தேர்வுகள் :

**அறிமுறைத்தேர்வு 06.04.2025 ஞாயிறு 10:00 மணிக்கு 3ம்மாடி மண்டபத்தில் நடைபெறும்.**

செய்முறைத்தேர்வு 11.05.2025 நடைபெறும்.

### சிற்றுண்டிச்சாலை வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.

*தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேநீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும்.*

### நிதி

கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம். ஏற்கனவே செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

**குறிப்பு:** அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் முழுமையாகச் செலுத்தியவர்கள் மட்டுமே அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம். மேலதிக விவரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.

### விளையாட்டு - 2025

**ஆண்டுத்திட்டத்தின்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நாள்கள் விவரம்.**

1. ஞாயிறு 08.06.2025 - இல்லங்களுக்கிடையே தெரிவுப்போட்டி.
2. திங்கள் 09.06.2025 - குழை எடுத்தல் கிளித்தட்டு தெரிவுப்போட்டி
3. சனி 14.06.2025 - அரையிறுதி, கள இறுதிப் போட்டிகள்.
4. ஞாயிறு 15.06.2025 - 34ஆவது இல்லவிளையாட்டுப் போட்டிகள்.

- விளையாட்டுப் போட்டிக்கான குழு தெரிவுசெய்ய வேண்டும்.
- மாணவர்கள் இவ் விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு முன் Tamilsk Barn og Ungdom Idrettsklubb (TBUK) இல் உறுப்பினராகப் பதிவுசெய்தல் வேண்டும். இவ்விடயம் சார்ந்த ஒரு படிவம் மற்றும் *PDF* விரைவில் அனுப்பிவைக்கப்படும்.
- விளையாட்டுப் போட்டிக்கான குழுவில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளவும்.
- விளையாட்டுப் போட்டிகள் சார்ந்த ஒரு திட்டமிடல் சந்திப்பு விரைவாக இடம்பெறும்.

**வகுப்புப் பிரதிநிதிகள் சந்திப்பு**

02.04.2025 - நடைபெற்றது.

**வளாக நிகழ்வுகள்!**

றொம்மன் வளாகத்தின் விளையாட்டுப்போட்டித் தகவற்கூட்டம் - 12.04.2025

**அன்னை பூபதி நினைவுநாள் - 19.04.2025**

**அடுத்த வாரம் 11,12.04.2025 அன்னை பூபதி நினைவுநாள் பாடசாலையில் வகுப்பு நேரத்தில் நினைவுகூரப்படும்.**

தமிழின அழிப்பு 16 ஆம் ஆண்டு நினைவுநாள் - 18.05.2025 ஞாயிறு

இக்கல்வியாண்டின் இறுதிநாள் - 15.06.2025

**முக்கிய கவனம்!!**

1. *கற்பித்தல் நேரத்தில் மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எந்த இடையூறும் விளைவிக்காதவண்ணம் பெற்றோர் பாதுகாவலர்கள் கவனத்தில் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

கற்பித்தல் நேரத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையூறு ஏற்படாமல் இருப்பதற்கு, புரிந்துணர்வுடன் பணியாற்றிய அனைத்துப் பெற்றோர் பிரதிநிதிகள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***
***தொலைபேசி இல. 004740076104.***

நன்றி!

நிர்வாகம் - றொம்மன் வளாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.